## கொடைக்கானல் நகராட்சி

2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ம் நாள் (28.12.2018) வெள்ளி கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் நவம்பர்–2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **543, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **மன்றத்தால் பதிவு செய்யப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சியில் வார்டு பி, பிளாக் 5, நகரளவு எண். 25 கே.ஆர்.ஆர். கலையரங்க வளாகத்தில் யாத்திரி நிவாஸ் அமைத்திட விருப்பம் கோரும் ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான நாளிதழில் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே.ஆர்.ஆர். கலையரங்க வளாகத்தில் யாத்ரி நிவாஸ் அமைத்தல் பணி | Accord Advertising Agencies, Chennai (Deccan Chronicle, Dinamalar dated 1.11.2018) State Level | AAA/0844/18-19 dated 4.11.2018 | 1,00,538/– |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (கோப்பு .ந.க.எண். 2855/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **544, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சியின் வளர்ச்சி பணிகளை நாளிதழ்களில் விளம்பரம் செய்தவகையில் தொகை வழஙக கோரி கீழ்க்கண்ட விவரப்படி தினமலர் நாளிதழின் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தினமலர் | 181 | 20.11.2018 | 25725 |

நாளிதழ்களின் பட்டியலின்படி தொகையினை நாளிதழ் நிறுவனஙகளுக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 545, நாள். 28.12.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பழைய மண் அணைக்கும், மனோரஞ்சிதம் சோலைக்கும் இடையில் தடுப்பணை (Check Dam) ரூ. 9,86,70,606/– மதிப்பீட்டில் மூலதன நிதி மானியம் ( Capital Grant Fund) மூலம் அமைப்பதற்கு அரசு ஆணை (நிலை) எண். 117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை, நாள்.20.11.2018ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. தொழில்நுட்ப அனுமதி பெறும் பொருட்டு அண்ணா தொழில்நுட்ப கல்லூாி, திண்டுக்கல் மூலம் கட்டிட வடிவமைப்பு (Structural Design) பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) தொழில்நுட்ப அனுமதி பெறும் பொருட்டு அண்ணா தொழில்நுட்ப கல்லூாி, திண்டுக்கல் மூலம் கட்டிட வடிவமைப்பு (Structural Design) பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும்,அதற்கான செலவினத்தினையும் அனுமதிக்கலாம். (கோப்பு நக.எண். 3985/2015/இ1)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 546, நாள். 28.12.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

5) கொடைக்கானல் நகராட்சியில் வார்டு பி, பிளாக் 5, நகரளவு எண். 25 கே.ஆர்.ஆர். கலையரங்க வளாகத்தில் யாத்ரி நிவாஸ் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எ ண். 26453/2018/பி4 நாள். 28.9.2018 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன்படி 14.11.2018 அன்று விருப்பம் கோரும் அறிவிப்பு கோரப்பட்டது. விருப்பம் கோரி யாரும் கலந்து கொள்ளாததால் மறு விருப்பம் கோரும் அறிவிப்பு 30.11.2018 ல் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் 28–11–2018 ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையரக செயற்பொறியாளரின் தொலைபேசி செய்தியில் கொடைக்கானல் நகராட்சியில் யாத்ரி நிவாஸ் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்ட விபரங்கள் தயாரித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. Preparation of Financial Viability
2. Preparation of RFP as per PPP guidelines and TNIDB format
3. Preparation of concessionaire agreement as per PPP guidelines and TNIDB format
4. Making presentations to cma and secretary when ever required

மேற்கண்ட விபரங்கள் தயாரித்திட கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. Amruth Infra Advisory Servies,<br>2/366, A.G.S. Colony, 2nd Main Road, Kottivakkam, Thiruvanmiyur, Chennai. | Rs. 197000/- |
| 2. | A.P.Srinivasan, (Infrastructure Consultant)<br>No. 1, Andaver Street, 113, Meenakshi flats, Madipakkam, Chennai. | Rs. 262000/- |
| 3. | R.Sushane Kumar, (Infrastructure Consultant)<br>No. 78, 12th Cross Street, Senthil Nagar, Kolathur, Chennai. | Rs.259000/- |

மேற்கண்ட மூன்று விலை புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Amruth Infra Advisory Servies, Chennai மூலம் மேற்கண்ட பணிகளை செய்து முடித்திடவும், அதற்கான தொகையினை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 547, நாள். 28.12.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

6) பொது நிதி 2018–2019 ன் கீழ் ரூ. 46.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆனந்தகிரி 4–வது தெருவில் (துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டுமானம் அருகில் ) தாஙகு சுவர் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு 14–11–2018 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை சரிபார்க்கப்பட்டதில் ( Evaluation ) திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் , ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதிகள் சரியாக உள்ளன. திரு.வி. அருள்தாஸ் ஐந்தாம் வகுப்பு ஒப்பந்ததாரராக உள்ளதால் அன்னாருக்கு தகுதி இல்லை.

1. திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம், ஒப்பந்ததாரர் – Rs.46500/- –– தொழில்நுட்ப தகுதி உள்ளது.
   (EMD.265475 dt 13.11.18 Indian Bank Kodaiknal.)
2. திரு வி. அருள்தாஸ், ஒப்பந்ததாரர் – Rs.46500/- –– தொழில்நுட்ப தகுதி இல்லை.
   (EMD.26545 dt 13.11.18 Indian Bank Kodaiknal.)

எனவே, திரு.எம்.ஆர். பிலால் இப்ராஹிம் என்பவரின் விலை விகித ஒப்பந்தப்புள்ளி Price Bit -யை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ஆனந்தகிரி 4–வது தெருவில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு அமையும் இடத்தில் மழை நீர் வடிகால் மற்றும் தாஙகு சுவர் அமைத்தல் | 46.50 | திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் | Rs.4016024.80<br>மதிப்பீட்டினை விட 0.06 விழுக்காடு குறைவு |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. தொழில்நுட்ப தகுதி உள்ள ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டினை விட 0.06 விழுக்காடு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 548, நாள். 28.12.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

7) சுஙக நிதி 2018–2019 ன் கீழ் ரூ. 26.00 இலட்சம் மதிப்பீட்டில் முதலியார்புரம் 1 மற்றும் 2–வது தெரு ஆனந்தகிரி 2 மற்றும் 3–வது தெருவில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 2634/2018/ஊ.வ.8 நாள்.13.8.2018 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்ள 14.11.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை சரிபார்க்கப்பட்டதில் (Evaluation ) திரு பி. அரசகுமார் , ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதிகள் சரியாக உள்ளன. திரு தட்சிணாமூர்த்தி , என்பவர் ஐந்தாம் வகுப்பு ஒப்பந்ததாரராக உள்ளதால் அன்னாருக்கு தகுதி இல்லை.

1. திரு பி. அரசகுமார், –– தகுதி உள்ளது.
   ஒப்பந்ததாரர்
   (EMD.265479 dt 12.11.18 Indian Bank Kodaiknal.)
2. திரு தட்சிணாமூர்த்தி
   ஒப்பந்ததாரர் –– தகுதி இல்லை
   (EMD.265471 dt 12.11.18 Indian Bank Kodaiknal.)

இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை சரிபார்க்கப்பட்டதில் ( Evaluation) திரு.பி.அரசகுமார், ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதிகள் சரியாக உள்ளன. திரு.தட்சிணாமூர்த்தி என்பவருக்கு தொழில்நுட்ப தகுதிகள் இல்லை. எனவே, திரு.பி. அரசகுமார் என்பவரின் Price Bit திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலை பெறப்பட்டுள்ளது.

1. திரு.பி. அரசகுமார்
   ஒப்பந்ததாரர்
   (EMD.265479 dt 12.11.18 Indian Bank Kodaiknal.) -- ரூ. 22,69,672/-

இது மதிப்பீட்டினை விட 1.22 விழுக்காடு அதிகம். ஆணையர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | முதலியார்புரம் 1 மற்றும் 2 வது தெரு, ஆனந்தகிரி 2 மற்றும் 3 வது தெருவில் தார்ச்சாலை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 26.00 | பி. அரசகுமார் | ரூ. 22,69,672/- <br> மதிப்பீட்டினை விட 1.22 விழுக்காடு அதிகம் |

மேற்க்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீடு விலை விகிதத்தினை விட கூடுதலாக உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு பி. அரசகுமார் அவர்களிடம் விலை குறைப்பு கடிதம் 28.11.2018 ல் கோரப்பட்டதில் திரு பி.அரசகுமார் ஒப்பந்ததாரர் மேற்படி பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.25% குறைவாக பணிகள் செய்ய விலை குறைப்பு சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.25% குறைவாக பணிகள் மேற்கொள்ள விலை குறைப்பு கடிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு பி. அரசகுமார் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **549, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலக குறிப்பு ஏற்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள 2KVA, 3KVA,5KVA திறன் கொண்ட UPS (Unintrupted Power supply ) கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பாக வாஙகப்பட்டு இதுநாள் வரை பயன்பாட்டில் இருந்து வந்தது. கடந்த கஜா புயல் காலத்தில் மேற்கண்ட UPS ( Unintrupted Power supply ) பழுதடைந்துவிட்டது. மேற்கொண்டு இதன் மின் சேமிப்பு திறனும் குறைந்துவிட்டபடியாலும், பழைய இயந்திரம் என்பதினால் உதிரி பாகஙகள் கிடைப்பதில்லை என்பதினாலும், இந்நகராட்சியின் அனைத்து கணணிகள் மற்றும் வசூல் பணிகள் அனைத்தும் UPS (Unintrupted Power supply ) உடன் மேற்கொள்ளப்பட்டு வருவதினாலும் புதியதாக 7.5 KVA திறன்கொண்ட UPS இயந்திரம் வாஙகிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 2.50 இலட்சம் ( ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **550, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) நகர்மன்றத் தீர்மானம் எண். 1687 நாள்.29.8.2016ன் அனுமதியின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணைக்கடிதம் ந.க.எண்.7884/P3/2017 நாள்.23.8.2017ன்படி தனியார் மயம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 80 துப்புரவுப்பணியாளர்களை கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களால் 2016–2017ம் ஆண்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளி கோரி பிப்ரவரி 2018 முதல் துப்புரவுப்பணிகள் நடை பெற்று வருகிறது.

நகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்ட நிரந்தர துப்புரவுப்பணியாளர்களின் எண்ணிக்கை 105 ஆகும். தற்சமயம் பணிபுரியும் துப்புரவுப்பணியாளர்களின் எண்ணிக்கை 68 ஆகும். அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (ந.ப.3) நாள்.30.4.1997ன்படி தேவைப்படும் துப்புரவுப்பணியாளர்களின் எண்ணிக்கை 165 ஆகும்.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.15.10.2018ன்படி இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.3140/2016/எச்1/நாள்.15.10.2018ன் மூலம் அரசாணை (நிலை)எண்.101ன்படி கூடுதலாக 16 துப்புரவுப்பணியாளர்கள் தேவைக்கு கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணைக்கடிதம் ந.க.எண்28369/13/2018– நாள்.22.11.2018ல் இந்நகராட்சிக்கு கூடுதலாக 16 துப்புரவுப்பணியாளர்களை தனியார் மயம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் விதிகளுக்கு உட்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களால் துப்புரவுப்பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்திற்கு துப்புரவுப்பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சுற்றுலாத்தலமான இந்நகரின் சுகாதாரத்தினை பேணிக்காத்திடவும், சுணக்கமின்றி துப்புரவுப்பணிகள் நடைபெறவும், தனியார் மயம் மூலம் 16 கூடுதல் துப்புரவுப்பணியாளர்களை 2018–2019ம் ஆண்டுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலின்படி துப்புரவுப்பணியாளர்களின் ஊதியத் தொகைக்குமிகாமல் கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 16 துப்புரவுப்பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ.332/–வீதம் 12 மாதங்களுக்கு (332X16X365) | ரூ.19,38,880/– |
| 2 | ESI,EPF,Life Insurance,Uniforms and Safety Equipments etc. 10% | ரூ 1,93,888/– |
| 3 | Service Tax 5% | ரூ. 96,944/– |
| 4 | Administrative Charges for Private Sector 10% | ரூ. 1,93,888/– |
| | மொத்தம் | ரூ.24,23,600/– |

ரூ.24,23,600/–ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்தி இருபத்தி மூன்றாயிரத்தி அறுநூறு மட்டும்.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம்.ந.க.எண்.28369/J3/2018 நாள்.22.11.2018ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் இந்நகராட்சிக்கு தனியார் மூலம் 16 எண்ணிக்கையில் ஒப்பந்த தொழிலாளர்களை பயன்படுத்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3140/2016/எச்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **551, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) துப்புரவு ஆய்வாளர்கள் பிரிவு 1,2 மற்றும் 3 குறிப்பு நாள்.20.11.2018ல் நகர்ப்பகுதியில் 24 வார்டுகளிலும் கட்டண கழிப்பறைகள் தவிர்த்து 41 பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள் பயன்பாட்டில் உள்ளன என்றும், இக்கழிப்பறைகளை பொதுமக்களும் சுற்றுலாப்பயணிகளும் பயன்படுத்திவருவதாகவும், இக்கழிப்பறைகளை அன்றாடம் துப்புரவுப்பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருவதாகவும், துப்புரவுப்பணியாளர்கள் தத்தம் பகுதிகளில் துப்புரவுப்பணிகளையும் மேற்கொண்டு கழிப்பறைகளையும் சுத்தம் செய்வதால் கழிப்பறைகளை தொடர்ந்து சுத்தமாக பராமரிப்பதில் சுணக்கம் ஏற்படுவதால், கொடைக்கானல் சர்வதேச சுற்றுலாதளமாக உள்ளதால் உள் மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப்பணிகளின் வருகை அதிமாக இருப்பதால் நகராட்சிக்கு சொந்தமான கழிப்பறைகளை சுத்தமாகவும்,

சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டியுள்ளதாலும், மேலும் துப்புரவுப்பணியாளர்கள் காலிப்ப்பணியிடங்கள் அதிகரித்து கொண்டே செல்வதாலும், தனியார் மயம் மூலம் பணி மேற்கொள்ள ஆவண செய்யுமாறு குறிப்பு வழங்கியுள்ளார்கள்.

கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்ட பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள்/சிறுநீர் கழப்பறைகள் நகராட்சி பணியாளர்களை கொண்டு துாய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>இந்நகராட்சியிலுள்ள கழிப்பறைகள் விபரப்பட்டியல்</u>

| வ. எண் | கழிப்பறைகள் விபரம் | கோப்கைகளின் எண்ணிக்கை | | | கழிப்பறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1 | நாயுடுபுரம் பாலம் அருகில் | 5 | 5 | 10 | 1 |
| 2 | சென்ட் சேவியர் பள்ளி அருகில் | 3 | 2 | 5 | 1 |
| 3 | பழைய டிப்கோ கான்சென்ட் ரோடு | 2 | 3 | 5 | 1 |
| 4 | டோபிகானல் | 4 | 2 | 6 | 1 |
| 5 | எம்.எம்.தெரு | 4 | 4 | 8 | 1 |
| 6 | ஏஐடியுசி நகர் | 3 | 3 | 6 | 1 |
| 7 | சீனிவாசபுரம் பேருந்து நிறுத்ததம் பின்புறம் | 4 | 3 | 7 | 1 |
| 8 | இந்திரா நகர் | 5 | 5 | 10 | 1 |
| 9 | இந்திரா நகர் | 0 | 5 | 5 | 1 |
| 10 | இந்திரா நகர் | 3 | 3 | 6 | 1 |
| 11 | இந்திரா நகர் | 6 | 6 | 12 | 1 |
| 12 | கல்லரை மேடு (இந்து) | 3 | 3 | 6 | 1 |
| 13 | கல்லரை மேடு (முஸ்லீம்) | 3 | 3 | 6 | 1 |
| 14 | கல்லரை மேடு (கிருஷ்டின்) | 3 | 3 | 6 | 1 |
| 15 | அண்ணாநகர் | 4 | 4 | 8 | 1 |
| 16 | ஆனந்தகிரி 4வது தெரு | 3 | 4 | 7 | 1 |
| 17 | ஆனந்த கிரி 4வது தெரு | 0 | 6 | 6 | 1 |
| 18 | ஆனந்தகிரி 3வது தெரு | 6 | 0 | 6 | 1 |
| 19 | ஆனந்தகிரி 3வது தெரு | 0 | 6 | 6 | 1 |
| 20 | காந்திபுரம் சமுதாய கழிப்பிடம் | 3 | 3 | 6 | 1 |
| 21 | காந்திபுரம் எஸ்.எஸ்.காலணி | 3 | 3 | 6 | 1 |
| 22 | நகராட்சி குடியிருப்பு அருகில் | 4 | 4 | 8 | 1 |
| 23 | பிலிஸ்வில்லா | 4 | 4 | 8 | 1 |
| 24 | தினசரி சந்தை | 3 | 2 | 5 | 1 |
| 25 | வாரச்சந்தை | 2 | 2 | 4 | 1 |
| 26 | போஸ்ட் ஆபீஸ் ரோடு | 2 | 2 | 4 | 1 |
| 27 | பழைய பேருந்துநிலையம் நம்ம டாய்லட் | 5 | 5 | 10 | 1 |
| 28 | ஏரி (அலுவலகம் அருகில்) | 6 | 4 | 10 | 1 |
| 29 | ஏரி (கிரீன் ஏக்கர் அருகில்) | 2 | 2 | 4 | 1 |
| 30 | ஏரி (சாய்பாபா பங்களா அருகில்) | 4 | 4 | 8 | 1 |
| 31 | அப்பர் லேக் வியூ | 3 | 3 | 6 | 1 |
| 32 | அப்சர்வேட்டரி புதுக்காடு | 3 | 3 | 6 | 1 |
| 33 | பாம்பார்புரம் (உள்பகுதி) | 3 | 3 | 6 | 1 |
| 34 | பேருந்து நிலையம் இலவச கழிப்பறை | 2 | 2 | 4 | 1 |
| 35 | அந்தோணியார் கோவில் தெரு | 4 | 4 | 8 | 1 |
| 36 | கோக்கர்ஸ் வாக் | 2 | 3 | 5 | 1 |
| 37 | கோக்கர்ஸ்வாக் | 1 | 4 | 5 | 1 |
| 38 | சில்வர் கேஸ்கேட் | 1 | 0 | 1 | 1 |
| 39 | சில்வர் கேஸ்கேட் | 0 | 2 | 2 | 1 |
| 40 | சென்பகனுார் | 4 | 4 | 8 | 1 |
| 41 | சென்பகனுார் | 5 | 5 | 10 | 1 |
| | | 127 | 138 | 265 | 41 |

மேற்கண்ட விபரத்திற்கு இந்நகராடசியின் 41 இடங்களில் உள்ள கழிப்பறைகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள மொத்த கோப்பைகள் 265ல் ஒருக்கழிப்பறைக்கு 8 (எட்டு) எண்ணிக்கையிலான சராசரி விகிதத்தில் 33 எண்ணிக்கையிலான கழிப்பறையாக கொண்டு இவற்றில் ஒரு கழிப்பறைக்கு மாதம் ரூ.7000/– வீதம் (33X7000=2,31,000/–) மொத்தம் ரூ.2,31,000/–ஐ கழிப்பறை பராமரிப்பு செலவினமாக மேற்கொள்ளலாம். இவ்வாறு 12

மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.27,72,000/—ஐ (ரூபாய் இருபத்தேழு இலட்சத்தி எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.3202/2018/எச்1)

*******

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **552, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

11) அரசாணை எண்.84 நாள்.25.6.2018ன்படி தமிழகம் முழுவதும் எதிர்வரும் 1.01.2019 முதல் ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் (பாலி எத்திலின்) தடை விதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கொடைக்கானல் நகர் பகுதிகளிலும் மேற்காணும் அரசாணையை அமுல்படுத்த வேண்டியுள்ளதாலும், மேலும் இந்நகரம் பிரசித்திபெற்ற சர்வதேச சுற்றுலாத்தலமாக உள்ளதால் வருடம் முழுவதும் வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துக்கொண்டே செல்வதாலும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளிடம் பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள்பற்றிய விழிப்புணர்வினை தொடர்ந்து ஏற்படுத்தி மலைகளின் இளவரசி என போற்றப்படும் கொடைக்கானல் நகரின் இயற்கையினை பாதுகாக்க வேண்டியும் பிளாஸ்டிக் மாசற்ற நகராட்சியாக உருவாக்கவேண்டியும், பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி விழிப்புணர்வு பதாகைகள் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்கள் மற்றும் அதிகமாக சுற்றுலாப்பயணிகள் வந்து செல்லும் கீழ்கண்ட இடங்களான,

(1) வெள்ளி நீர் வீழ்ச்சி, (2)குறிஞ்சி ஆண்டவர் கோயில், (3) மூஞ்சிக்கல், (4)வாரச்சந்தை, (5) கலையரங்கம், (6) நாயுடுபுரம், (7) பேருந்து நிலையம், (8)கோக்கர்ஸ்வாக், (9) பசுமை பள்ளத்தாக்கு, (10) பிரையண்ட் பூங்கா போன்ற இடங்களில் நிறுவ வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளார்கள். இதன்பேரில் மேற்கண்ட இடங்களில் நிரந்தர பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகள் பற்றிய விழிப்புணர்வு பதாகைகள் நிறுவுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,90,000/—க்கு(ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொன்னூறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கு ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **553, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) அரசாணை நிலை எண். 514, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை நாள். 18.12.2014—ன்படி, கொடைக்கானல் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (UIDSMT-WSIS) ன் கீழ் கீழ்குண்டாறு பகுதியில் இருந்து குடிநீர் எடுத்து கொடைக்கானல் நகர் பகுதிக்கு விநியோகம் செய்யும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, முதன்மை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மதுரை அவர்களின் கடிதம் எண். LR.No,26216/F.Kodaikanal WSIS/S DO1/C W/2016, dated 26.2.2016 கடிதத்தின்படி பணி உத்திரவு வழுங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மேற்காணும் பணிகளில் மதிப்பீட்டில் வகை செய்யப்படாத பணிகளான 5150 குடிநீர் இணைப்புகளுக்கு, இணைப்பு மற்றும் மீட்டர் பெரூல் வால்வு இணைப்புகள் போன்ற பணிகள் மேற்கொள்ள UIDSSMT திட்டத்தின் சுழல் நிதியின் கீழ் (Under Revolving Fund of UIDSSMT) TUFIDCO நிறுவனத்தில் அரசு மாநியமாக பெற்று ''வீட்டு குடிநீர் குழாய் இணைப்பிற்கான உட்புற குழாய் இணைப்புப் பணி மேற்கொள்ளுதல்'' (Provision of Internal Plumping for House Service Connection) என்ற அடிப்படையில் நகரில் 5150 குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு திட்ட மதிப்பீடாக **ரூ.350.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு கழகத்தால் **(TUFIDCO)** ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் மதிப்பீட்டு தொகை **ரூ. 350.00** இலட்சம் முழுவதும் அரசு மான்யமாக பிரேரணை அனுப்பி பெற்று மேற்கொண்டு பணிகளை செய்துகொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.1497/2006/இ1)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 554, நாள். 28.12.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

13) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 22866/2018/பி3 நாள். 23.8.2018–ல் கொடைக்கானல் நகராட்சியில் துாய்மை இந்தியா திட்டம் 2018–2019 திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ. 247.00 இலட்சம் Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திடும் பணிக்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 27.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. 25.10.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு தொழில்நுட்ப தகுதி உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | M/s. Voltech O and M Services PVt Ltd,<br>Voltech Tower, No. 2/429, Mount Poonamalli Road<br>Ayyappanthangal, Chennai. | -- | தகுதி உள்ளது. |
| 2) | M/s. Green Fine Equipments<br>2/61, Annai Velankanni Nagar 3rd Street,<br>Vinayagapuram, Saravanam Patti Post,<br>Coimbatore | -- | தகுதி இல்லை. |
| 3) | M/s.3R Management PVt., Ltd.,<br>Flat No. 5-F, Fifth Floor, Vandana Building 11,<br>Tolstoy marg, New Delhi<br>(All Documents in Hindi Language translated Version not received. Intimation given to the Concern to submit the translated version on 25.10.2018 At 7.48 PM) | -- | தகுதி இல்லை |

மேற்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Voltech O and M Services PVt Ltd, Voltech Tower, No. 2/429, Mount Poonamalli Road Ayyappanthangal, Chennai நிறுவனத்திற்கு தொழில் நுட்ப தகுதி உள்ளது. அதன் அடிப்படையில் M/s. Voltech O and M Services PVt Ltd, Voltech Tower, No. 2/429, Mount Poonamalli Road Ayyappanthangal, Chennai நிறுவனத்தின் Price Bid யை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலை பெறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | M/s. Voltech O and M Services PVt Ltd,<br>Voltech Tower, No. 2/429, Mount Poonamalli Road<br>Ayyappanthangal, Chennai. | -- | 2,58,75,000/– |

( ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து எட்டாயிரத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும் )

இது மதிப்பீட்டினை விட 7.98 விழுக்காடு அதிகம். எனவே, ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கோரப்பட்டதில், ஒப்பந்ததாரரின் 12.12.2018 ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு (ரூ.2,39,62,500/– ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும் )இப்பணியினை செய்து கொடுத்திட சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு பணி மேற்கொள்ள விலை குறைப்பு சம்மத கடிதம் கொடுத்துள்ள M/s. Voltech O and M Servces PVt Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 555, நாள். 28.12.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | ஏற்கப்படுகிறது. |

*******

14) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு – தற்போது 2 ம் நிலையில் குப்பைகள் அகற்றப்படும் Dumper Binகளில் சில மிகவும் பயனற்று ஓட்டை உடைசலுமாய் உள்ளது. மேலும் மேற்படி Dumper Bin களை குப்பைகளுடன் அதற்குரிய வாகனத்தில் ஏற்றி உரக்கிடஙகிற்கு செல்லும்போது சாலைகளில் குப்பைகள் சிதறுவதோடு பொது சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே, எதிர்வரும் பருவ காலத்தை கருத்தில் கொண்டும், பொது சுகாதார அவசியம் கருதியும் 10 எண்ணம் Dumper Bin களும் , சுற்றுலா தளஙகளில் வைப்பதற்காக 240 லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 வீல் அமைப்பு உள்ள Dust Bin களும் உரிய அரசு விதிகளின்படி பொது நிதியின் கீழ் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 556, நாள். 28.12.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

15) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான சீனிவாசபுரம் நகராட்சி துவக்கப் பள்ளியின் மராமத்து பணிகள் மேற்கொள்ள சீனிவாசபுரம் நகராட்சி துவக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியரால் கோரப்பட்டுள்ளது. எனவே, கொடைக்கானல் சீனிவாசபுரம் நகராட்சி துவக்கப் பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 2.40 இலட்சம் ( ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளி கோரவும், கல்வி நிதியின் மூலம் இச்செலவினத்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 557, நாள். 28.12.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

16) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளியின் மராமத்து பணிகள் மேற்கொள்ள அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியரால் கோரப்பட்டுள்ளது. எனவே, கொடைக்கானல் அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 2.80 இலட்சம் ( ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளி கோரவும், கல்வி நிதியின் மூலம் இச்செலவினத்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **558, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

17) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ஆனந்தகிரி நகராட்சி துவக்கப் பள்ளியின் மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆனந்தகிரி நகராட்சி துவக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியரால் கோரப்பட்டுள்ளது. எனவே, கொடைக்கானல் ஆனந்தகிரி நகராட்சி துவக்கப் பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 6.20 இலட்சம் ( ரூபாய் ஆறு இலட்சத்து இருபதாயிரம் மட்டும் ) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளி கோரவும், கல்வி நிதியின் மூலம் இச்செலவினத்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **559, நாள். 28.12.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.